[1989 மே 2

அனுமான் நதி மீது மேம்பாலம்.

174—(*வினா எண் 788)—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ரோட்டில் அனுமான் நதி மீது மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமான் நதியிலே ஐரிஷ் பாலம் இருக்கின்ற காரணத்தினால் மழைக் காலங்களிலே சுமார் 75 கிராமங்கள் போக்குவரத்தில் பாதிக்கப்படுகின்றன. எனவே, இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அதிலே ஒரு பாலம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவரவர் களே, இந்த அனுமான் நதியில், மழை பெய்தால் மட்டும் தான் ஏராளமான நீர் வருகிறது என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார் கள். இருந்தாலும்கூட, மழை பெய்கின்ற காலத்திலேகூட அதிக மான தண்ணீர் வரும்பொழுது போக்குவரத்து நின்று போகின்றது என்பது உண்மைதான். எனவே, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பால வேலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்ல தம்பி. (குறுக்கீடு) வேண்டியதில்லை, சரி ஒருவேளை அனுமான் நதி என்பதனால் அனைவரும் தாவியே போய்விடலாம் என்று கருதியிருப்பார்கள். (சிரிப்பு)

நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி.

175—(*வினா எண். 821) திரு. ரவி அருணன் : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத் தில் இருந்து பொட்டல்புதூர் — பாப்பான்குளம்—இடைகால் — அரியநாயகிபுரம்—சேரன்மகாதேவி வழியாக நாகர்கோவில் செல்ல நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1989 மே 2]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கேள்வியில் குறிப்பிடப்பெற்றுள்ள வழித் தடத்தின் பெரும்பகுதி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக எல்லைக்குள் இருப்பதால், அந்தக் கழகத்தைக் கலந்து நேசமணி போக்குவரத்துக் கழகம் மேற் சொன்ன தடத்தில் பேருந்து விடுவதற்கான நடவடிக்கை எடுக்கும், இந்தத் தடத்தில் எதிர் பார்க்கப்படும். பயணிகள் விகிதம், கழகத்தினுடைய நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நாகர்கோவிலிலிருந்து விடப்படுகின்ற பேருந்துகள் நேசமணி போக்குவரத்துக் கழகத்தால் தான் இயக்கப்படுகின்றன. ஆகவே, இதையும் நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அரசு இயக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் கடையத்திலிருந்து சேரன்மகாதேவி வழியாக நாகர்கோயிலுக்குச் செல்லுகிற இந்தத் தடத்தின் மொத்த நீளம் 106 கிலோ மீட்டர். இதிலே நேசமணி போக்குவரத்துக் கழகத்தினுடைய எல்லை 19 கிலோ மீட்டர் தூரம் தான் இருக்கிறது. எனவே தான் இரண்டு போக்குவரத்துக் கழகங்களுடனும் கலந்து பேசி, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இந்த வழித் தடத்தில் பேருந்து விடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது.

திரு. ரவி அருணன் : பேரவைத் தலைவரவர்களே, மேற்கூறிய வழித் தடங்களின் வழியாக சேரன்மகாதேவி வரை நகரப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. தம்புசாமி : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன் சென்னை—நாகப்பட்டினம் இடையில் கடலூரில் டிரைவர்கள், கண்டக்டர்கள் மாற்றுகின்ற நிலையம் ஒன்று இருந்தது. அது இடைக்காலத்திலே ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவுக்குத் தொடர்பற்றது.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவரவர்களே. வட கோவை மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது. இது எப்பொழுது தொடங்கப்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட கோவை மேம்பாலம் கட்டக் கூடிய திட்டம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் பத்து கோடி ரூபாய் செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்தப் பாலம் கட்டக் கூடிய இடத்தில் காட்டிலாக்காவிற்குச் சொந்த மான நிலம் தேவைப்படுகின்ற காரணத்தினாலே, கொஞ்ச நாள் தாமதப்பட்டு, தற்போது அந்தத் துறையினுடைய மாண்பு மிகு அமைச்சரவர்களும் அந்த இடத்தை நேரடியாக இரண்டு மாதங்களுக்கு முன்னாலே வந்து பார்வையிட்டு, வழங்கு வதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். மதிப் பீடுகள் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்பு தலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் அந்தப் பணிகள் விரைவாகத் தொடங்கப்படும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனைக் கட்டிடம்.

176—(*வினா எண் 976)—திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூரில் உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிறுவனத்திற்கென பணிமனைக் கட்டிடம் நிறுவப்படாததற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கென கிளை பணி மனை ஒன்று ஏற்கனவே நிறுவப்பட்டு 1-7-1985 முதல் இயங்கி வருகிறது.

இதைத் தவிர தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் திற்கென சொந்தமாக பணிமனை நிறுவுவதற்காக அருள்மிகு வீரடேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம் திருக்கோயிலூர் வட்டம் மணம்பூண்டி கிராமத்தில் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு மேற்படி நிலத்தை நேரடி விலைக்கு வாங்குவதற் கான முயற்சி நடைபெற்று வருகிறது. நிலம் கிடைத்தவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பணிமனைக் கட்டடம் கட்டுகிற போது அந்தப் பணிமனைக்காக கொடுக்கப்பட்டிருக்கிற சிமெண்ட், ஜல்லி, கம்பிகள் அந்தத் துறையில் பணியாற்றுகிற